**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**------------**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 45/2025 |
| Prosecution Witness | : | **அ.சா.**6 |
| Name | : | **சதீஸ்குமார்** (**காவல் ஆய்வாளர்**) |
| Father's / Husband Name | : | |
| Address | : | |
| Age | : | 41/2026 |

**தேதி : 04.03.2026**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திருமதி.ஆ. சத்தியபாமா சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது. **4, 5, 6, 13 எதிரிகள் ஆஜர். 1 முதல் 3 எதிரிகள் 7 முதல் 12 எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்படுகிறது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது கரூர் மாவட்டம் நங்கவரம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 02.11.2024ம் தேதி 16.15 மணிக்கு பெரம்பலூர் காவல் நிலையத்தில் பணியில் இருந்தபோத சிறப்பு உதவி ஆய்வாளர் செந்தில்ராஜா அவர்கள் பதிவு செய்திருந்த குற்ற எண். 826/2024 சட்டப்பிரிவுகள் 191(ii), 296(b), 132 BNS ன் கீழ் பதிவு செய்திருந்த வழக்கு கோப்பை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே 17.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ரஞ்சித்குமார், ராஜபூபதி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை ம கசர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **அந்த பார்வை மகசர் அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வரைபடம் அ.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் இவ்வழக்கின் சாட்சிகளான ஹேமாவதி, தீபலட்சுமி, உமா, பிரியா, ரஞ்சித்குமார், ராஜூபதி மற்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் செந்தில்ராஜா ஆகியோர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். சம்பவ உண்மை என தெரியவந்து எதிரிகளை தேடி வந்த நிலையில் 22.11.2024ம் தேதி 9.30 மணிக்கு களரம்பட்டி பேருந்து நிறுத்தம் அருகே நின்றுக்கொண்டிருந்த எதிரிகள் நாகராஜ், செல்வகுமார், ரெங்கராஜ் ஆகியோர்களை காரணம் கூறி கைது செய்து தக்க வழிகாவல் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். மற்ற எதிரிகள் மாண்புமிகு அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றிருந்ததால் அவர்களை கைது செய்யவில்லை.

பின்னர் எதிரிகளுக்கு எதிராக எனது இறுதி விசாரணை முடித்து அதே சட்டப்பிரிவுகளின் கீழ் குற்ற இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதி அன்று நானும், உயர் அதிகாரிகளுடன் பணியில் இருந்ததேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் கோவிலில் அன்றைய தினம் முழுவதும் காவலர்கள் பணியில் இருந்தார்கள் என்றால் சரிதான். புகார்தாரர் கொடுத்த புகாரில் சம்பவம் நடந்த நேரம் பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். புகார்தாரர் கொடுத்த புகாரை பதிவு செய்து அன்றைய தினமே நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்துள்ளேன் என்றால் அதில் நான் தேதியை குறிப்பிடவில்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் பொதுமக்கள் அதிகம் இருக்கும் இடம் என்றால் சரிதான். அந்த இடத்தில் இருந்த யாரையும் சாட்சியாக அழைக்கப்படவில்லை என்றால் சரியல்ல.

நான் பதிவு செய்த சாட்சிகளின் வாக்குமூலங்கள், பார்வை மகசர், மாதிரி வரைபடம் ஆகியவற்றை முதல் தகவல் அறிக்கையுடன் அனுப்பி எதிரிகளையும் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேனா என்றால் முதல் தகவல் அறிக்கை தவிர

மற்ற அனைத்தையும் எதிரிகளை கைது செய்த 22.11.2024 அன்று நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். நான் முதல் தகவல் அறிக்கையை எதிரிகளை கைது செய்து ஒப்படைக்கும்போதுதான் அனுப்பிவைத்தேன் என்றால் சரியல்ல. அ.சா. 1 கொடுத்த புகாரில் எதிரிகள் அவரை தள்ளியோ, அடித்தோ, காயப்படுத்தியதாகவோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

மற்ற சாட்சிகளும் எதிரிகள் அவரை தள்ளியோ, அடித்தோ, காயப்படுத்தியதாகவோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அ.சா. 1 கொடுத்த புகாரில் எதிரிகள் அவரை என்ன தகாத வார்த்தையில் திட்டினார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். புகார்தாரர் அரசு ஊழியர் என்பதால் அவர் கொடுத்த பொய்யான புகாரை வைத்து சரியாக புலன் விசாரணை செய்யாமல் பொய்யான வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be correct

Sd/-.
Judicial Magistrate No.1(FAC)
Perambalur.